நாள் 23.11.2021
அ வ எண் 103/17
வா சா 1 நாச்சியார்
சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்
8ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

எனது கணவர் பெயர் பி.கே.திருவேங்கடம். எனது கணவரின் தந்தை பெயர் பி.டி.கிருஷ்ணபிள்ளை. எனக்கும் பி.கே.திருவேங்கடத்தும் எந்த வருடம் திருமணம் நடந்தது என்றால் 1951. எனக்கு 8 குழந்தைகள். நான் யாருடன் இருக்கிறேன் என்றால் எனது மகளுடன் இருக்கிறேன். நான் பட்டபுரம் பண்ணை குடும்பத்தில் உள்ள நபருக்கு திருமணம் ஆனதால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் 1951ல் தான் படடர் புரம் பண்ணை குடும்பத்திற்கு திருமணம் ஆகி வந்ததால் எனக்கு அனைத்து குடும்ப விவரங்களும் தெரியாது என்றால் சரிதான். மேற்படி வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் வழக்கு சொத்து எனது மாமனாருக்கு பாத்தியப்பட்டது எனவே எங்களுக்கு கிடைப்பதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது மாமனாருக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை, எனது மாமனா எங்களுக்கு இடம் எழுதி வைத்துள்ளார். இன்று என்னை இந்நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தது எனது மகனும், மருமகன். எனது மாமனாருக்கோ, கணவருக்கோ தபசில் சொ்த்தில இருந்து தெய்வ வழிபாடுக்கு கைங்கிரியம் செய்வதற்கு மட்டும் தான் உரிமை உள்ளது என்றாலும், வேறு உரிமை இல்லை என்றாலும் சரிதான். தெய்வ காரியங்களுக்காக கொடுக்கப்பட்ட சொத்தை கிரையம் செய்வது தவறு என்றால் சரிதான். நான் சொத்துக்கள் விற்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் ஒன்றும் விற்கவிலலை. அவ்வாறு நான் சொ்த்துக்களை விற்று இருந்தால் அது சட்டப்படி செல்லாது என்றால் சரிதான். எனது முன்னோர்கள் சொத்துக்களில் இருந்து வரும் வருமானத்தை தெய்வ காரியங்களுக்கு விழாக்களுக்கு பயன்படுத்தி வந்துள்ளார்கள், ஆனால் எனது கணவர் களக்காடு கோமதி அம்மாள் அன்னதான சத்திரம் கட்டளை நெற்களஞ்சியம் உட்பட சொததுக்களை விற்பனை செய்துவிட்டார்எனறால் சரியல்ல. மேற்படி வழக்கில் 6வது பிரதிவாதி சுடலைகனி, 7ம் பிரதிவாதி முருகன் ஆகியோரை சேர்த்துள்ளர்கள் எனற் விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி நபர்களுக்கு எனது கணவர் சொத்துக்களை விற்பனை செய்து பட்டா மாற்றம் செய்து விட்டதாலும அதை எதிர்த்து 1ம் பிரதிவாதி சேரன்மகாதேவி வட்டாட்சியரிடம் மனு

கொடுத்து மேற்படி பட்டா மாற்றத்ததை ரத்து செய்து, மீண்டும் பழைய நிலையில் உள்ளது என்றால் தெரியாது. எனவே எனது கணவா் 6,7 பிரதிவாதிகளுக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரம் செல்லத்க்கது அல்ல என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு நான் வழக்கறிஞா் அலுவலகத்துக்கு சென்றேனா என்றால் நான் செல்லவில்லை. எனது மகள் தான் சென்றால். இந்த வழக்கு விவரங்கள் அனைத்தும் நான் கூறவில்லை எனது மகள் தான் கூறினால் என்றால் சரியல்ல. எனது கணவா் மற்றும் அவரது பங்காளிகள் பட்டா்புரம் பண்ணை குடும்ப சொத்துக்களை சரியாக பராமரிக்காததாலும் சொத்துகளை விற்ற காரணங்களாலும் அரசாங்கம் மேற்படி பட்டா்புரம் பண்ணை சொத்துகளையும், நிா்வாகத்தையும் கைபற்றி நிா்வாகத்தை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோவில் செயல் அலுவலரை தக்காராக நியமனம் செய்து பட்டா்புரம் பண்ணை செய்ய வேண்டிய தெய்வகாரியங்களை சொ்த்துக்களை பராமரிப்பத்ற்கு நியமிக்கப்பட்டாா் என்றால் சரிதான். மேற்படி விவரம் எனக்கு தெரியும். மேற்படி நியமனம் செய்தது தவறு என்று எனது கணவா் மனு எண்.3/2010வை HR and CE Department Tirunelveli ல் மனு செய்தாா் என்றால் மேற்படி விவரம் எனக்கு தெரியாது. மேலும் அதை எதிா்த்து எனது கணவா் மாண்புமிகு.சென்னை உயா்நீதிமன்றத்தில் வழக்கு செய்து அதுவும் தள்ளுபடி ஆகி விட்டது என்றால மேற்படி விவரம் தெரியாது. எனவே, நான் HR and CE Department Tirunelveli ல் ஏற்பட்ட உத்தரவை பொறுத்து மேற்படி டிபாா்மெண்டில் உயா் அதிகாரிகளிடம் தான் மனுசெய்து இருக்க வேண்டும் என்றாலும் இந்த நீதிமன்றத்தில் வழக்கு செய்ய வழிவகை இலலை என்றாலும் சரியல்ல. எனவே இந்நீதிமன்றத்தில் எனது வழக்கு நிலைக்கத்தக்து அல்ல என்றாலும் தள்ளுபடி செய்யவேணடும் என்றாலும் சரியல்ல. தெய்வகாரியங்களுக்கு கொடுக்கப்படட சொத்தை எனது கணவா் விற்றது சட்டப்படி குற்றம் என்றால் சொத்துக்களை விற்கவில்லை.